நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.

இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.

*K.S. பாலச்சந்திரன்*

## இது ஓர் ஈழத்துக் கலைஞர்களின் பதிவுத் தொடர்...

**ஆழத்து முத்துக்கள் 14**

# இசை நாடகக் கலைஞன்
# அரியாலையூர் செல்வம்

நான் இன்னும் பாதுகாப்பாக வைத்திருக்கும் ஒலி நாடாக்களில் ஞானம்ஸ் ஒலிக்கூடத்தில் பதிவு செய்யப்பட்ட காங்கேசந்துறை வசந்த கான சபாவினரின் 'மயான காண்டம்', இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் தயாரிக்கப்பட்ட வி.வி. வைரமுத்துவின் மணிவிழா சிறப்பு நிகழ்ச்சி மற்றும் அரியாலையூர் செல்வம் என்ற செல்வரத்தினம் அவர்களின் நாடக மேடைப் பாடல்கள் என்பன குறிப்பிடத்தக்கவை.

*'பாலன் இறந்த இடம் இதுதானோ — எந்தன்*
*சீலன் மடிந்த இடம் இதுதானனோ*
*ஆலமரம் என்பதும்.....''*

ஏன்ற பாடலுடன் சந்திரமதியாக பாம்பு கடித்து இறந்த தன் மகனைத் தேடியவாறு அவர் கானகம் செல்கின்ற அந்தக் காட்சி இன்றும் கண்ணுக்குள் நிற்கிறது.

*'அப்பா மகளே நான் பாவி*
*அரசே உனது மகள் - நொந்து*
*அழுவதும் கேட்கவில்லையோ...''*

என்று கையிழந்த ஞான சௌந்தரியாக அவர் அழுது புலம்புகின்ற காட்சி கல்லையும் கரையவைக்கும்.

அவர் தான் செல்வம் என்று இசை நாடக உலகில் அறியப்பட்ட அரியாலையூர் செல்வரத்தினம் அவர்கள் இசை நாடகத்தில் பெண் வேடம் என்றால் செல்வம் என்று பேசப்படும் அளவுக்கு மனப் பதிவைத் தந்தவர்.

தற்போது 62 வயதைத் தாண்டிய செல்வம் அவர்கள் தனது 12 ஆவது வயதில் வி.வி. வைரமுத்துவின் நாடகங்களில் தோழிப் பாத்திரங்களை ஏற்று வந்தார். இதற்கு முக்கிய காரணம், அந்நாளில் வைரமுத்து அவர்களுடன் சந்திரமதியாக வேடமேற்று வந்த சோக சோபித சொர்ணம் கவிக்குயில் ரத்தினம் அவர்கள் செல்வம் அவர்களின் அண்ணன் என்பதாகும்.

இவரது வயதை நோக்கின் ஒரு 50 வருடகாலத்தை இசை நாடக உலகிற்கு இவர் அர்ப்பணித்திருக்கிறார். அரியாலை கலைமகள் நாடக சபாவினரால் மேடையேற்றப்பட்ட கன்னிக்கோட்டை, பதவி மோகம், வள்ளித் திருமணம் போன்ற நாடகங்களை மூலம் பிரமுக்கிய வேடம் ஏற்று நடித்துள்ளார். ஆயினும், நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்களுடன் இணைந்து ஏற்றுக்கொண்ட பாத்திரங்களே செல்வம் அவர்களுக்கு பெருமை சேர்த்தன. பெண்ணுக்கான குரல் வளமும் பாடும் திறனும் இசை நாடகங்கள் பற்றிய அறிவும் இதற்கு முக்கிய காரணிகளாக அமைந்தன. பின்னாட்களில் வி.என்.செல்வராசா, வி.டி.செல்வராசா நற்குணம், அரியாலையூர் பொ. சண்முகலிங்கம் ஆகியோருடன் இணைந்து நடித்த இசை நாடகங்கள் இவரது புகழுக்கு மேலும் மெருகூட்டின.

கலைஞர் செல்வம் ஏற்ற பாத்திரங்களில் சந்திரமதியே மிகப் பெரிய அளவில் பேசப்பட்டது. கொழும்பு, கண்டி, பதுளை என்று இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் மொத்தமாக ஆயிரம் தடவைகளுக்கு மேல் இவர்' சந்திரமதியாகத் தோன்றிய மயான காண்டம் மேடையேறியது. ஈழத்து நாடக உலகில் ஒரு சரித்திரம். அந்நாடகத்தில் பொன்னிற மேனியுடன் அரையில் ஒரு கரிய துண்டுடன் *'பிறந்ததும் மண்மேல்...'* என்று தொடங்கும் நடிகமணியின் அபார பாடும் திறனும் நடிப்பும் பிறிதொரு சரித்திரம்.



தான பாகம் ஏற்று நடித்த செல்வம் அவர்கள் அரியாலை சுதேசிய விழா நாடகங்களிலும் செல்வம் அவர்கள் சந்திரமதியாகத் தோன்றிய மயான காண்டம் நாடகமே அதிகளவில் மேடையேறியது. எனினும் அவர் வேறு பல நாடகங்களில் பெண் பாத்திரங்கள் ஏற்று நடித்துள்ளார். அவற்றில் சாவித்திரி, ஞானசவுந்தரி, முளி அலங்காரி, ஊர்வசி, அல்லி, பவளக்கொடி, நல்லதங்காள், கண்ணகி என்பன குறிப்பிடத்தக்கவை.

பேராசிரியர் வித்தியானந்தன் மூலமாகவே இலங்கையின் பல பாகங்களிலும் தனது நாடகங்கள் மேடையேறியதாக குறிப்பிடும் இவர் கண்டியில் வட்டக்களரி அரங்கிலும் நாடகம் செய்துள்ளார். இலங்கை வானொலியில் பல நிகழ்ச்சிகளை அளித்துள்ள இவர் நடித்த மயான காண்டம் இலங்கையில் தயாரிக்கப்பட்ட நிர்மலா என்ற திரைப்படத்தில் ஒரு காட்சியாக ஒளிபரப்பானது.

செல்வம் அவர்களுடன் பேசுவது ஒரு அலாதியான அனுபவத்தைத் தரும். பெண்பாத்திரத்திற்காக தன் வாழ்நாள் முழுவதும் அரிதாரம் பூசிய அவர் பெண்ணின் நளினத்துடனும், மென்மையான குரலிலும் நிஜ வாழ்விலும் பேசுவார். நடிகமணி பற்றி அண்ணன் நவரத்தினம் பற்றி, மேடையில் நடந்த சுவாரஸ்யங்கள் பற்றி, நாடகத்துக்குச் செல்லும் வழியில் இடம்பெற்ற சம்பவங்கள் பற்றி நிறைய நிறைவான விடயங்கள் இவரிடம் உள்ளன.

தொலைபேசி போன்ற தெலைத்தொடர்பு சாதன வசதிகள் குறைந்த அந்தக்காலத்தில் யாழ் மாவட்டத்தில் வெவ்வேறு திக்குகளில் (காங்கேசன்துறை, அரியாலை) இருந்த இந்த இசை நாடகக் கலைஞர்கள் ஆயிரத்துக்கும் அதிகமான நாடகங்களை மேடையேற்றினார்கள் என்பது அபூர்வமான சங்கதியாகும். அதிலும் செல்வம் அவர்கள் பகலெல்லாம் தன் தொழில் செய்துவிட்டு இரவில் நடிப்பது என்பது சுலபமானது அல்ல. அவர் இசை நாடகம் மீது கொண்ட பக்தியை ஏப்ரல் 20 2004 காலம் சஞ்சிகைக்கு அளித்த பேட்டி சிறப்பாக விளக்கும்.

"எனக்கு அப்ப வறுமை இருந்தது. ஒரு உடுப்பை மட்டும் உடுக்கின்ற நிலைமை இருந்தது. இந்த நிலைமையில் அங்க மேடையில் நிற்கும் போது சனம் ஏற்படுத்துகின்ற உற்சாகத்தைப் பார்க்கும் போது ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் வீட்டில் இருக்கின்ற மாதிரி நினைப்பேன்."

"தற்போது உடல் வருத்தம். எனினும் கடைசி மட்டும் நாடகம் செய்ய வேண்டும். களைத்து விழுந்தாலும் மேடையில் தான் என் உயிர் போகவேண்டும் என்பதுதான் எனது ஆசை"

இந்த மாபெரும் இசைக் கலைஞனை இதுவரை யாரும் கௌரவித்தார்களா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், செல்வம் அவர்களைப் போல் ஒரு 50 வருடகாலமாக பெண்ணாக அரிதாரம் பூசி மேடையேறி, பல்வேறு இசைப் பாடல்களைப் பாடி பார்ப்போரை உருக வைக்கும்படி நடித்து தற்போது எம்மண்ணில் அருகி வரும் இசை நாடகத்திற்கு உயிர் கொடுத்து வந்த இவர் போல இனி ஒரு கலைஞன் பிறப்பாரா என்பது சந்தேகமே.



sriskanthan.p@thaiveedu.com

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■

இணையத்தளத்திலும்
'தாய்வீடு'
www.thaiveedu.com